# பூங்கா கீதம்

பூங்கா எங்கள் தமிழ்ப்பூங்கா
புகழ்தருமே தமிழ்ப்பூங்கா
வண்ண வண்ணத் தமிழ்ப் பூங்கா
வாழ்க வாழ்க தமிழ்ப்பூங்கா 2

கலைகள் யாவும் சேர்ந்து இங்கே
கானம் பாடும் தமிழ்ப்பூங்கா
ஈழமண்ணின் வாசம் தனை
இங்கு வீசும் தமிழ்ப்பூங்கா

பூங்கா எங்கள் தமிழ்ப்பூங்கா
புகழ்தருமே தமிழ்ப்பூங்கா
வண்ண வண்ணத் தமிழ்ப் பூங்கா
வாழ்க வாழ்க தமிழ்ப்பூங்கா

மலரும் மொட்டுக் கூடி நிதம்
மகிழும் எங்கள் தமிழ்ப்பூங்கா
மண்ணின் வாசம் தேடியெமை
மாலை சூடும் தமிழ்ப்பூங்கா

வாழ்த்துச் சொல்லிப் பாடி நமை
வாழவைக்கும் தமிழ்ப்பூங்கா
எழுக எழுக தமிழ்ப்பூங்கா
எங்கள் அன்புத் தமிழ்ப்பூங்கா

பூங்கா எங்கள் தமிழ்ப்பூங்கா
புகழ்தருமே தமிழ்ப்பூங்கா
வண்ண வண்ண தமிழ்ப் பூங்கா
வாழ்க வாழ்க தமிழ்ப்பூங்கா
வாழ்க வாழ்க தமிழ்ப்பூங்கா
வாழ்க வாழ்க தமிழ்ப்பூங்கா

இயற்றியவர் நித்தியா தர்மசீலன்